Tamil | தமிழ்

# 2027 -ஆம் ஆண்டுக்கான ஆரம்பப்பள்ளிச் சேர்க்கை



விக்டோரியாவில் ஆரம்பப்பள்ளியின் முதல் ஆண்டு என்பது அடிப்படைக் கல்வியாகும். (அது ஆயத்தக் கல்வி (Prep)) என்றும் அழைக்கப்படுகிறது)

உங்கள் குழந்தை 30 ஏப்ரல் 2027 -க்கு முன் 5 வயதை எட்டியிருந்தால் பள்ளியைத் தொடங்கலாம்.
உங்கள் குழந்தை 6 வயதை எட்டியதும் பள்ளிக் கல்வி கட்டாயமாகும்.

### நான் எப்போது விண்ணப்பிக்கலாம்?

2027 -ஆம் ஆண்டுக்கான விக்டோரிய அரசின் ஆரம்பப் பள்ளியில் சேருவதற்கான விண்ணப்பங்கள்:

- 20 ஏப்ரல் 2026 திங்கள் கிழமை முதல் **விண்ணப்பிக்கலாம்**
- **31 ஜூலை 2026 வெள்ளிக்கிழமைக்குள்** விண்ணப்பிக்க வேண்டும்**.**

### என் குழந்தையின் சேர்க்கைக்கான உரிமைகள் என்ன?

விக்டோரியாவில், *கல்வி மற்றும் பயிற்சி சீர்திருத்தச் சட்டம் 2006* -இன் கீழ் உங்கள் குழந்தை தங்களுக்கென ஒதுக்கப்பட்ட அருகிலுள்ள பள்ளிக்குச் (உங்கள் 'உள்ளூர்ப் பள்ளி') செல்லும் உரிமை உள்ளது. உங்கள் உள்ளூர்ப் பள்ளி என்பது உங்கள் நிரந்தரக் குடியிருப்பு முகவரிக்கான பள்ளி மண்டலத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. சேர்க்கை முடிவுகள் எவ்வாறு எடுக்கப்படுகின்றன என்பது பற்றி மேலும் அறிய, பள்ளியில் சேர்க்கை பற்றிய விவரத்துக்குச் செல்லவும்.

### ஆரம்பப்பள்ளியின் முதலாம் ஆண்டில் எனது குழந்தையை நான் எப்படிச் சேர்ப்பது?

உங்கள் குழந்தையை ஆரம்பப் பள்ளியின் முதல் ஆண்டில் எவ்வாறு சேர்ப்பது என்பது கீழே தரப்பட்டுள்ளது:

1. **உங்கள் உள்ளூர்ப் பள்ளியைக் கண்டறியவும்**
   உங்கள் உள்ளூர் அரசு ஆரம்பப் பள்ளி அல்லது அருகிலுள்ள பள்ளிகளைக் கண்டறிய www.findmyschool.vic.gov.au என்ற இணையதளத்துக்குச் செல்லவும்.
2. **பள்ளியைத் தொடர்பு கொள்ளவும்**
   விருப்பச் சுற்றுலாவுக்கு முன்பதிவு செய்ய ஆரம்பப் பள்ளியைத் தொடர்பு கொள்ளவும். அந்தப் பள்ளி இணைய வழியிலான (VicStudents) சேர்க்கைச் செயல்முறையைப் பயன்படுத்துமா அல்லது காகித அடிப்படையிலான சேர்க்கைச் செயல்முறையைப் பயன்படுத்துமா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். இந்தத் தகவல்கள் பள்ளியின் இணையதளம் மூலம் கிடைக்கும்.
3. **தகவல் தொகுப்பைப் பதிவிறக்கம் செய்யவும்**
   'அடிப்படைக் கல்வி (ஆயத்தக் கல்வி) சேர்க்கை' (Enrolling in Foundation (Prep)) என்ற பக்கத்திலிருந்து அடிப்படைக் கல்வி (ஆயத்தக் கல்வி) சேர்க்கைத் தகவல் தொகுப்பைப் பதிவிறக்கம் செய்யவும். இந்தத் தொகுப்பு 2 ஏப்ரல் 2026 வியாழக்கிழமைக்குள் கிடைக்கும்.
4. **உங்கள் சேர்க்கை விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும்**
   **31 ஜூலை 2026 வெள்ளிக்கிழமைக்குள்** அவர்களது இணையதளத்தில் விவரிக்கப்பட்டுள்ள பள்ளியின் செயல்முறையின் அடிப்படையில் இணையவழியாக (VicStudents) அல்லது காகித படிவத்தைப் பயன்படுத்திச் சேர்க்கை விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும்.
5. **விண்ணப்பத்திற்கான முடிவைப் பெற்றுக் கொள்ளவும்**
   **ஆகஸ்டு 3 திங்கட்கிழமை முதல் ஆகஸ்டு 14 வெள்ளிக்கிழமை 2026 வரை** உங்கள் சேர்க்கை விண்ணப்பத்தின் முடிவு குறித்து உங்களுக்கு அறிவிக்கப்படும். உங்களுக்கு இசைவு (offer) வழங்கப்பட்டால், **28 ஆகஸ்டு 2026 வெள்ளிக்கிழமைக்குள்** நீங்கள் அதை ஏற்க வேண்டும்.
6. **உங்கள் குழந்தையின் பள்ளிக்கான மாற்றத்துக்குத் தயாராகவும்**
   2026 -ஆம் ஆண்டு 4 -ஆம் பருவத்தின் போது மாணவர் மாற்ற அமர்வுகளில் பங்கேற்கவும். உங்கள் குழந்தை **28 ஜனவரி 2027 வியாழக்கிழமை** முதல் அடிப்படைக் கல்வியைத் தொடங்கும்.

## எனது உள்ளூர்ப் பள்ளியைக் கண்டறிவது எப்படி?

கீழ்க்கண்ட படிகளைப் பின்பற்றி 'எனது பள்ளியைக் கண்டறிக' (Find my School) இணையதளத்தில் உங்கள் உள்ளூர்ப் பள்ளியைக் கண்டறியவும்:

1. உங்கள் உலாவியில் (browser) www.findmyschool.vic.gov.au என்ற இணையதள முகவரியை உள்ளீடு செய்யவும்.
2. 'ஆரம்பிப்பதற்காக உங்கள் முகவரியைப் பதிவுசெய்யவும்' ('Enter your address to get started') என்பதற்குக் கீழே உங்கள் நிரந்தர முகவரியை உள்ளீடு செய்யவும்.
3. 'ஆட்சேர்ப்பு ஆண்டு' ('Enrolment year') என்பதற்குக் கீழ் 2027 என்று தேர்வு செய்யவும். **2027 -ஆம் ஆண்டிற்கான பள்ளி மண்டல விவரங்கள் 2 ஏப்ரல் 2026 வியாழக்கிழமைக்குள்** கிடைக்கும்.
4. 'பாடசாலை வகை' ('School type') என்பதற்குக் கீழே ஆரம்பப்பள்ளி (Primary) என்பதைத் தேர்வு செய்யவும்.

அதன்பின் வரைபடத்தில் உங்கள் முகவரி, உங்கள் உள்ளூர்ப் பள்ளி மற்றும் இடதுபுறம் பள்ளியின் தொடர்பு விபரங்கள் காட்டப்படும். நீங்கள் அந்தப் பக்கத்தின் கீழ்ப்பகுதியில் பார்த்தால், உங்கள் முகவரிக்கு மிக நெருக்கமாக உள்ள 5 பள்ளிகளையும் காட்டும். 'பள்ளியைக் தேடவும்' ('Search for school') என்பதற்குக் கீழே பள்ளியின் பெயரை வைத்தும் நீங்கள் தேட முடியும்.

## எனது சேர்க்கை விண்ணப்பம் வெற்றிபெறாமல் போய்விட்டால் என்ன செய்வது?

உங்கள் விண்ணப்பம் வெற்றிபெறவில்லை என்றால், நீங்கள்:

- வேறொரு பள்ளிக்கு **விண்ணப்பிக்கவும்**. உங்கள் குழந்தைக்கு அவர்களது உள்ளூர்ப் பள்ளியில் ஓர் இடம் உத்தரவாதமாக உண்டு. உங்கள் குழந்தையின் உள்ளூர்ப் பள்ளியைக் கண்டறிய **'எனது பள்ளியைக் கண்டறிக' (Find my School)** பக்கத்துக்குச் செல்லவும்.
- முடிவை மேல்முறையீடு செய்யவும். 'அடிப்படைக் கல்வி (ஆயத்தக் கல்வி) சேர்க்கை(மாணவர் ஆட்சேர்ப்பு)' (Enrolling in Foundation (Prep)) பக்கமானது ஒரு சேர்க்கை விண்ணப்ப முடிவு மேல்முறையீட்டு நடைமுறைக்கான விபரங்களைக் கொண்டுள்ளது.

## சேர்க்கைக்கான காலக் கெடுவினை நான் தவறவிட்டால் என்ன நடக்கும்?

2027 கல்வியாண்டிற்கான அடிப்படைக் கல்வியில் உங்கள் குழந்தையைச் சேர்க்க, **20 ஏப்ரல் 2026 திங்கட்கிழமை** முதல் எந்த நேரத்திலும் விண்ணப்பிக்கலாம்.

**31 ஜூலை 2026 வெள்ளிக்கிழமைக்குள்** சேர்க்கை விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்குமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டாலும், சேர்க்கைக் காலக்கெடுவைத் தவறவிட்ட, நிரந்தர வசிப்பிடத்தை மாற்றிய அல்லது விக்டோரியாவிற்கு புதிதாக வந்திறங்கிய குடும்பங்களிடமிருந்து தாமதமான விண்ணப்பங்கள் அதன்பின்னும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**31 ஜூலை 2026 -க்குப் பிறகு சமர்ப்பிக்கப்பட்ட** சேர்க்கை விண்ணப்பங்கள், திணைக்களத்தின் சேர்க்கைக் கொள்கைக்கு இணங்க, **அவை பெறப்பட்டவுடனே** ஆரம்பப் பள்ளியால் நிர்வகிக்கப்படும்.

## ஆரம்பப்பள்ளியில் சேர்க்கை குறித்த கூடுதல் தகவல்களை நான் எங்கு காணலாம்?

அடிப்படைக் கல்விச் சேர்க்கை நடைமுறை குறித்த கூடுதல் தகவல்களுக்கு உங்கள் உள்ளூர் ஆரம்பப்பள்ளியில் கேளுங்கள்.

**20 ஏப்ரல் 2026 திங்கட்கிழமை** முதல் அடிப்படைக் கல்வி (ஆயத்தக் கல்வி (Prep)) சேர்க்கைப் பக்கத்தில் அடிப்படைக் கல்விச் சேர்க்கை செயல்முறை குறித்த தகவல் தொகுப்பையும் நீங்கள் காணலாம்.

தகவல் தொகுப்பை மொழிபெயர்ப்பதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து உங்கள் உள்ளூர் ஆரம்பப்பள்ளியுடன் தொடர்புகொண்டு பேசவும்.

## உதவிக்கு நான் யாரைத் தொடர்பு கொள்வது?

இடமாறுதல் ஒருங்கிணைப்பாளர், சேர்க்கை அதிகாரி அல்லது நீங்கள் விண்ணப்பிக்க விரும்பும் ஆரம்பப்பள்ளியின் முதல்வர் ஆகியோர் சேர்க்கை நடைமுறை குறித்து உங்களுக்கு எழக்கூடிய எந்தக் கேள்விகளுக்கும் உதவமுடியும்.

## பயனுள்ள இணைப்புகள்

உங்களின் குழந்தை ஆரம்பப்பள்ளியை ஆரம்பிக்கும்போது கீழேயிருக்கும் உங்களுக்கு உதவக்கூடிய பயனுள்ள சில இணைப்புகளைத் தயவுசெய்து காணவும்:

எனது பள்ளியைக் கண்டறியவும் – findmyschool.vic.gov.au

பள்ளி மண்டலங்கள் பற்றிய தகவல்கள் – vic.gov.au/school-zones

'அடிப்படைக் கல்வி (ஆயத்தக் கல்வி) சேர்க்கை' (Enrolling in Foundation (Prep)) – vic.gov.au/enrolling-foundation-prep

'பள்ளியில் மாணவர் சேர்க்கை' (Enrolling in school) – vic.gov.au/how-choose-school-and-enrol

மாற்றுத்திறன் மற்றும் உள்ளடக்கிய கல்வி – vic.gov.au/disability-and-inclusive-education

பிராந்திய அலுவலகத் தொடர்புகள் – vic.gov.au/office-locations-department-education

# 2027 அடிப்படைக் கல்வி (ஆயத்தக் கல்வி (Prep)) சேர்க்கைகளுக்கான காலக்கெடு

| 2026 தேதிகள் | பெற்றோர்/பராமரிப்பாளர்கள் என்ன செய்ய வேண்டும்? |
| --- | --- |
| **பருவம் 1** | **27 ஜனவரி செவ்வாய்க்கிழமை (மாணவர்கள் ஜனவரி 28 அன்று தொடங்குகிறார்கள்) - 2 ஏப்ரல் 2026 வியாழக்கிழமை** |
| **பருவம் 1 மற்றும் பருவம் 2, 2026** | • ஆரம்பப் பள்ளிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட **பள்ளிச் சுற்றுலாக்களில் கலந்து கொள்ளவும்** *(விருப்பமிருந்தால்).* |
| **2 ஏப்ரல் 2026 வியாழக்கிழமைக்குள்** | • 2027 பள்ளி ஆண்டுக்கான பள்ளி மண்டல விவரங்கள் கிடைக்கின்றன. **உங்கள் உள்ளூர்ப் பள்ளியை** www.findmyschool.vic.gov.au என்ற இணையதளத்தில் நீங்கள் காணலாம். |
| **பருவம் 2** | **20 ஏப்ரல் திங்கட்கிழமை முதல், 26 ஜூன் 2026 வெள்ளிக்கிழமை வரை.** |
| **20 ஏப்ரல் 2026 திங்கட்கிழமை முதல்** | • 2 -ஆம் பருவத்தின் தொடக்கத்திலிருந்து, உங்கள் பள்ளி என்ன அறிவுறுத்துகிறது என்பதைப் பொறுத்து, இணையவழியாக அல்லது சேர்க்கைத் தகவல் தொகுப்பில் உள்ள விண்ணப்பப் படிவத்தைப் பயன்படுத்தி **உங்கள் குழந்தையின் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவும்**.<br>• மேலும் விவரங்களுக்கு, **அடிப்படைக் கல்வி (ஆயத்தக் கல்வி (Prep)) சேர்க்கையில்** இருந்து சேர்க்கைத் தகவல் தொகுப்பை நீங்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். |
| **பருவம் 3** | **13 ஜூலை திங்கட்கிழமை முதல், 18 செப்டம்பர் 2026 வெள்ளிக்கிழமை வரை** |
| **31 ஜூலை 2026 வெள்ளிக்கிழமைக்குள்** | • இந்த தேதிக்குள் ஆரம்பப் பள்ளியில் **உங்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும்**. |
| **3 ஆகஸ்டு திங்கட்கிழமை முதல் 14 ஆகஸ்டு 2026 வெள்ளிக்கிழமைக்குள்** | • இந்தக் காலகட்டத்தில் **சேர்க்கை முடிவுகளை ஆரம்பப் பள்ளிகள் எழுத்துப்பூர்வமாக உங்களுக்குத் தெரிவிக்கும்.**<br>• உங்கள் விண்ணப்பம் வெற்றிபெறவில்லை என்றால், நீங்கள் ஆரம்பப் பள்ளியில் மேல்முறையீடு செய்யலாம். |
| **28 ஆகஸ்டு 2026 வெள்ளிக்கிழமைக்குள்** | • சேர்க்கை இசைவுடன் (enrolment offer) வழங்கப்பட்ட சேர்க்கை படிவத்தை நிரப்புவதன் மூலம் **உங்கள் குழந்தையின் இடத்தை ஏற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தவும்**.<br>• நீங்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால், 28 ஆகஸ்டு வெள்ளிக்கிழமைக்குள் எழுத்துப்பூர்வ மேல்முறையீட்டைஉங்கள் ஆரம்பப் பள்ளியில் சமர்ப்பிக்கவும். |
| **11 செப்டம்பர் 2026 வெள்ளிக்கிழமைக்குள்** | • ஆரம்பப் பள்ளிகள் மேல்முறையீட்டுக்கான முடிவுகளை எழுத்துப்பூர்வமாக உங்களுக்குத் தெரிவிக்கும். |
| **18 செப்டம்பர் 2026 வெள்ளிக்கிழமைக்குள்** | • ஆரம்பப் பள்ளியில் உங்கள் மேல்முறையீடு தோல்வியுற்றால், தொடர்புடைய மண்டல இயக்குநரிடம் எழுத்துப்பூர்வ மேல்முறையீட்டைச் சமர்ப்பிக்கலாம். |
| **பருவம் 4** | **5 அக்டோபர் திங்கட்கிழமை முதல், 18 டிசம்பர் 2026 வெள்ளிக்கிழமை வரை** |
| **பருவம் 4, 2026** | • ஆரம்பப் பள்ளிகளால் நடத்தப்படும் மாற்ற அமர்வுகளில் கலந்து கொள்ளவும். |
| **6 நவம்பர் 2026 வெள்ளிக்கிழமைக்குள்** | • நீங்கள் மண்டல இயக்குநரிடம் மேல்முறையீடு செய்திருந்தால், இந்தத் தேதிக்குள் முறையீட்டு முடிவை மண்டலம் எழுத்துப்பூர்வமாக உங்களுக்குத் தெரிவிக்கும். இறுதித் தேதியான 18 செப்டம்பர் வெள்ளிக்கிழமைக்குள் பெறப்பட்ட மேல்முறையீடுகளுக்கு மட்டுமே இது பொருந்தும். |